**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 18.07.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் 112 வது நிறுவன தினம்**

மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் 112 வது நிறுவன தினம் 14 ஜூலை, 2023 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. 1911 இல் தோற்றுவிக்கப்பட்ட மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பு தொடர்ந்து வேளாண் மாணவர்களின் மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகிறது. மெட்ராஸ் அக்ரிகல்சுரல் ஜர்னல் என்னும் வேளாண் ஆய்வு குறித்த ஆய்வு கட்டுரைகளைப் பிரசுரிக்கும் அறிவியல் இதழையும் 1913 முதல் இடைவிடாமல் செயல்படுத்தி வருகிறது. அந்நிறுவனத்தின் 112 வது நிறுவன தினம் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது.

வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி விழாவிற்கு தலைமை தாங்கினார். என். ஜி.எம் கல்லூரியின் குழுமத் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். வேளாண் முதன்மையர் முனைவர் வெங்கடேச பழனிச்சாமி மற்றும் முதுகலை முதன்மையர் முனைவர் செந்தில் நடேசன் விழாவில் பங்கு பெற்றனர். பேராசிரியர் முனைவர் ரா.கண்ணன் சிறப்பு விருந்தினரையும் பல்கலைக்கழக மாணவர்களையும், பேராசிரியர்களையும் விழாவிற்கு வரவேற்றார். தலைமை உரை வழங்கிய துணைவேந்தர், வேளாண் மாணவர்கள் சங்க கூட்டமைப்பின் செயல்பாடுகளையும் மாணவர்களின் நலனுக்காக இந்நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களையும் பாராட்டினார். அறிவியல் இதழியலில் மெட்ராஸ் அக்ரிகல்சுரல் ஜர்னல் மேம்பட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய சிறப்பு விருந்தினர் வேளாண் பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்திற்கு மட்டுமல்லாது இந்தியாவிற்கு ஆற்றிய அறிவியல் தொண்டையும் 112 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளையும் பாராட்டினார். தனிமனித ஒழுக்கமும் நல்லெண்ணமும் ஒரு சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்த முடியும் என அனைவரும் நம்புவதோடு மட்டுமல்லாமல் அதை தினசரி வாழ்வியியலிலும் அமல்படுத்த வேண்டும் என மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் வேளாண்துறை சார்ந்த ஆய்வில் தனித்தன்மையோடு செயல்பட்டு வரும் பல்துறை சார்ந்த 16 பேராசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து கல்லூரிகளிலும் நடைபெற்ற மாணவர்களுக்கான போட்டியின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவின் இறுதியாக பேராசிரியர் மா.முருகன் நன்றி உரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**